RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s114

OPEN ACCESS

# பாரதியார் கவிதைகளில் மத நல்லிணக்கச் சிந்தனைகள்

**கோ. பூமாரி [அ, *], இரா. இலக்குவன் [அ]**

[அ] வெ.ப.சு. தமிழியல் ஆய்வு மையம், ம.தி.தா. இந்துக்கல்லூரி, திருநெல்வேலி-627010, தமிழ்நாடு, இந்தியா.

# Ideas of Religious Harmony in Bharathiyar Poetry

**K. Boomari [a, *], R. Ilakkuvan [a, *]**

[a] V.P.S Tamil Research Centre, M.D.T. Hindu College, Tirunelveli-627010, Tamil Nadu, India.

* Corresponding Author: k.boomari@gmail.com

Received: 10-08-2021
Revised: 17-07-2022
Accepted: 22-07-2022
Published: 09-09-2022

Check for updates

**ABSTRACT**

Bharathiyar's poems can be credited with leading the trend of Tamil literature to a new dimension in the twentieth century. It was Bharathiyar's works that made the Tamil language, which was immersed in the luxuriant flavours of the small literary genres in the palaces of the small land kings, rise up with a new force towards a new direction. Bharathiyar's poems, which arose for the liberation of the land, shed light on various fields, like women's liberation, spiritual liberation, caste liberation, and social liberation. Mahakavi Bharathiyar's poems became a rallying cry against slavery. Bharathiyar's family background, life in the city of Kasi, and friendship with Sri Aurobindo were factors in Bharathiyar's Hinduism. The reason why Bharathiyar took the nickname Shaktidaasan was because of his great love for Shakthi worship. Thus, even though Shakthi was sung as the supreme deity, Bharathiyar became a great devotee of the Vaishnava deity Kannan by composing the great poem Kannan Paattu. Bharathiyar's concept is also a celebration of the higher ideals of Buddhist philosophy. Although many poems have been sung with involvement in the various religious practises of India, it is also possible to know that religious harmony thoughts such as "one is supreme and we are its people" are prevalent in Bharathiyar's poems. Thus, speaking and writing about the ideas of religious harmony found in Bharathiyar's poems is an unavoidable requisite in today's environment. In this way, the ideas of religious harmony found in Bharathiyar poems are the foundation for the formation of a cultured society with high religious tolerance.

**Keywords:** Religious Reconciliation, Bharathiyar, Devotional Literature, Humanism, Brotherhood, Bharathi Yuga

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் பாரதி வாழ்ந்த காலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் மறுமலர்ச்சிக் காலம் ஆகும். தெய்வங்கள் மீதும், நிலப்பிரபுக்கள் மீதும் பாடப்பெற்ற சிற்றிலக்கிய வகைகளில் அமிழ்ந்து கிடந்த, மரபுக்கவிதையின் திசைவழியைத் தனது சமத்துவ சமூகப் பார்வையால் எழுச்சி மிக்கதாக மாற்றுகின்றார். இலக்கியம் என்பது சமூக மாற்றங்களுக்கான இன்றியமையாத ஒரு கருவி என்பதால் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை உருவத்திலும் உள்ளடக்கத்திலும் சில மாற்றங்களுடன் முகிழ்த்தன. இவ்வகையான மாற்றங்களுக்கு வித்திட்டவைகளில் மகாகவி பாரதியாரின் கவிதைகள் முன்னத்தி ஏராக விளங்குகின்றன. இருபதாம் நூற்றாண்டை பாரதி யுகம் என ஆய்வாளர்கள் பலரும் கூறும் அளவுக்கு மகாகவி பாரதியாரின் கவிதைகள் சமூக மாற்றங்களுக்கான வேர்களாக இன்றளவும் விளங்கி வருகின்றன. நூற்றாண்டுகள் கடந்தும் மகாகவி பாரதியாரின்

கவிதைகள் பேசுபொருளாகப் புழங்கப்படுவதன் காரணம், அக்கவிதைகள் பண்பட்ட மானுட சமூகத்திற்கான விழுமியங்களை நுவல்வதாலேயாகும். மானுடம் தழைக்கப் பாடிய மகாகவி பாரதியாரின் கவிதைகளில் காணப்படும் மத நல்லிணக்கச் சிந்தனைகளைக் கண்டுணர்வது தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டு முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

## கவிதையும் காலமும்

இலக்கியங்கள் வாழ்வியலைப் பிரதிபலிப்பனவாகும். இவையே மனித குலத்தின் பண்பட்ட வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றன. அவ்வகை இலக்கியங்களைப் படைக்கின்ற கவிஞன் தான் வாழ்ந்த காலத்தைக் கடந்தும் நின்று நிலைபெறக் காரணம் சமகாலத் தேவையைத் தமது படைப்புக்களின் வழி உரைப்பதேயாகும். இக்கருத்தை, "கவிஞன் தான் தோன்றிய காலத்தை வென்று நின்று பாடக்கூடியவன் என்றாலும் அவன் எந்தக் காலத்தில் தோன்றுகிறானோ அந்தக் காலத்தின் சாயல் அவனுடைய இலக்கியத்தில் காணப்படாமல் போகாது. தன்னுடைய காலநிலையை உணர்ந்து இலக்கியம் படைக்காமல் அறவே விட்டுவிடுகின்ற கவிஞன் மக்கள் தொடர்பு இல்லாதவனாகி விடுவான். மக்கள் தொடர்பு இல்லாத கவிஞன் சிறந்த கவிதைகள் இயற்றினாலும் அக்கவிதைகள் மக்களால் போற்றி ஏற்றுக்கொள்ளப்பெறுவதில்லை" (Gnanasambandan, 1995). என்னும் உரைப்பகுதியால் அறியலாம். மேற்கூறிய கருத்திற்கேற்ப, மகாகவி பாரதியார் தாம் வாழ்ந்த காலத்தின் முதன்மைத் தேவையாகிய விடுதலை உணர்வையும், நாட்டுப்பற்றையும் தம்முடைய தேசபக்திப் பாடல்கள் மூலமாக நாட்டு மக்களிடையே பரவச் செய்தார். பாரதியாரின் தேசபக்திப் பாடல்கள் நாட்டு மக்களிடையே ஒற்றுமை உணர்வை வளர்த்தன. அதுபோல, அவரது தெய்வபக்திப் பாடல்கள் ஆன்மநேய ஒருமைப்பாட்டை வளர்ப்பனவாக அமைந்துள்ளன. இவ்விதமாக பாரதியார் தாம் வாழ்ந்த காலத்தில் மக்கள் சமூகத்திற்குத் தேவையான ஒற்றுமைச் சிந்தனையைத் தனது கவிதைகளின் பாடுபொருள்களாகக் கொண்டு பாடியதால், அவர்தம் கவிதைகள் இன்றளவும் நிலைத்த புகழ் உடையனவாகத் திகழ்கின்றன.

## தேசபக்தியும் தெய்வபக்தியும்

மகாகவி பாரதியாரின் குடும்பப் பின்புலமானது, பக்திநெறிகளின்மீது பெருவிருப்புக் கொண்டு தோத்திரப் பாடல்கள் பல இயற்றுவதற்கு காரணமாக அமைந்தது. நாட்டுமக்களின் விடுதலை வேட்கையைத் தூண்டும் தேசபக்திப் பாடல்களையும், தமிழ் உணர்ச்சிப் பாடல்களையும் பாடிய மகாகவி பாரதியார், தெய்வபக்தியைப் பாடும் ஆன்மநேயக் கவிஞராகவும் புதிய பரிமாணம் கொண்டார். இவ்வாறு தேசபக்திக் கவிஞரான பாரதி தெய்வபக்திக் கவிஞராக மாறியதன் காரணத்தை, "1910ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பாரதியாரின் ஏற்பாட்டின்படி அரவிந்தர் புதுவை வருவதும் அவரோடு கவிஞர் நெருங்கிப் பழகியதும் கவிஞருடைய வளர்ச்சியில் மூன்றாவது திருப்பம் ஆகும். 1908ல் இருந்து 1910 வரை உள்ள இரண்டு ஆண்டுகளில் சுதேச கீதங்கள், ஜென்ம பூமி என்ற இரண்டு தொகுப்புக்களில் கவிஞரின் நாட்டுப் பாடல்கள் அனைத்தும் வெளிவந்துவிடுகின்றன. கீதை மொழிபெயர்ப்பும், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய அனைத்தும் 1912 என்ற ஒரே ஆண்டில் வெளிவந்தன என்றால் 1910ஆம் ஆண்டு பாரதிக்கும் 1912ஆம் ஆண்டு பாரதிக்கும் இடையே உள்ள கடல் அனைய வேற்றுமையைக் காணமுடிகிறது. இந்த வேறுபாட்டிற்குக் காரணம் 1910ல் ஏற்பட்ட அரவிந்தரின் சேர்க்கையே ஆகும் என்று நினைப்பதில் தவறில்லை. கீதை, உபநிடதங்கள், வேதங்கள் என்பவற்றில் அரவிந்தர் வந்தபிறகு மூழ்கியிருந்ததாகவும் அறிகிறோம். பக்திப்பாடல்கள் என்று சொல்லப்பெறுகின்ற விநாயகர் நான்மணிமாலை, தோத்திரப் பாடல்கள் வேதாந்தப் பாடல்கள் என்பவையும் கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியவையும் 1912 க்குப்பின் தோன்றின என்றால் தேசபக்தி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பாடல்கள் பாடி தமிழினத்தைத் தட்டி எழுப்பி நிமிர்ந்து நிற்குமாறு உபதேசம் செய்த பாரதியாரை, புறநோக்கிலேயே வாழ்நாளைக் கழித்த பாரதியாரை திசைதிருப்பி அகநோக்கில் செலுத்திய பெருமை மகான் அரவிந்தரைச் சாரும் என்பது தெரிகிறது" என்னும் கூற்றுக்கள் உணர்த்துவதால் அறியலாம் (Gnanasambandan, 1995).

மேலே கூறப்பட்டது போல, மகாகவி பாரதியார் தேசபக்தியோடு தெய்வபக்தி சார்ந்தும் பயணித்ததன் காரணத்தை விரிவாக ஆராயப் புகும் இடத்து, "அத்வைத சித்தாந்தத்தைக் கொண்டாடும் ஸ்மார்த்தப் பிராமண குடும்பத்தில் பிறப்பு, சிவபூசனை செய்யும் தாய்வழிப் பாட்டனார், எந்திர நாகரிகத்தின்மீது நாட்டமுடைய தந்தை, சிற்றின்பக் கவிதைகள் பெருக்கெடுத்த அரண்மனைத் தொடர்பு, வேதத்தின் பெருமையினை உணர்த்தும் காசி நகரத்துக் கல்வி, நாட்டு விடுதலைக்குப் பவானி பூசையைக் கருவியாகக் கொண்ட திலகரின் ஆளுமை, மண்டையம் சீனிவாச ஆச்சார்யார் என்னும் பழுத்த வைணவக் குடும்பத்துடன் அரசியல், கல்வித்தொடர்பு, வேதாந்தியான அரவிந்தரின் நட்பு இவையெல்லாம் பாரதியின் ஆன்மீக உலகத்தைப் பலமுறை தடம்மாற்றிக் காட்டியிருக்கின்றன". என்னும் கூற்று விரிவாக விளக்குவதைக் காணலாம் (Paramasivan, 2008).

## பாரதியாரின் சக்தி வழிபாடு

பாரதியார் போற்றுகின்ற தெய்வங்களுள் சக்தி வழிபாட்டிலேயே அவர் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்பதை அவர்தம் பக்திப்பாடல்கள்வழி அறியலாம் (Senthamizh Pavai & Arivudainambi, 2021).

"சக்தி தனையே சரணம் கொள்ளு-என்றும்

சாவினுக்கொரு அச்சமில்லை தள்ளு"

"சக்தி சக்தி என்றீராகில்

சாகா உண்மை சேர்ந்தீரே"

என்று சாவினையே வெற்றி கொள்ள சக்தியை வணங்கச் சொல்லும் பாரதி

"சக்தி சக்தி வாழியென்றால்

சம்பத்து எல்லாம் நேராகும்

சக்தி சக்தி என்றால்

சக்திதாசன் என்றே பேராகும்"

என்று தம்மை சக்திதாசன் என அழைத்துக் கொள்வதில் பேரின்பம் கொள்கிறார் (Meiyappan, 1992).

## தாய்த்தெய்வ வழிபாட்டின் நீட்சி

பாரதியாரின் சக்தி வழிபாட்டுச் சிந்தனை மிக இயல்பான ஒன்றாகும். தமிழ்ச்சமூக வழிபாட்டு மரபில் தாய்த் தெய்வங்களுக்கு இன்றியமையாத இடமுண்டு. சங்க காலத்தின் கொற்றவையிலிருந்து தொடங்கி இக்கால தாய்த்தெய்வங்கள் வரைக்கும் தமிழகத்தில் செல்வாக்கு மிக்கதாக பெண் தெய்வங்கள் கொண்டாடப்பெறுகின்றன. பெண்ணினம் மனித இன மறு உற்பத்தியின் ஆதாரமாக விளங்குவதால் தாய்த்தெய்வ வழிபாடு என்பது இன்றளவும் நிலைபெற்று விளங்குகிறது. பாரதியும் இச்சிந்தனை மரபுக்குள்ளேயே காலூன்றி நின்றுகொண்டு சக்தி வழிபாட்டை நாட்டு விடுதலைக்கான ஒரு உணர்ச்சி மிக்க ஆற்றலாகவும் தமது கவிதைகளில் வெளிப்படுத்துகின்றார். உலகில் எங்கெங்கு நன்மைகள் விளைகிறதோ அங்கெல்லாம் சக்தியின் அருள் நிறைந்து விளங்குவதாகவே பாரதி பாடுகிறார்.

"தோள் சக்தி தனக்கே கருவியாக்கு-அது

தாரணியும் மேலுலகும் தாங்கும்-தோள்

சக்தி தனக்கே கருவியாக்கு-அது

சக்தி பெற்று மேருவென ஓங்கும்

நெஞ்சம் சக்தி தனக்கே கருவியாக்கு-அதைத்

தாக்கவரும் வாள் ஒதுங்கிப் போகும்"

இவ்வாறு சக்தி தெய்வத்தைப் பாரதி பாடிப் பரவக் காரணம் தெய்வநம்பிக்கையின் மூலமாகத் தனது மனவலிமையைப் பெருக்கிக் கொள்வதற்கே ஆகும் எனக் கூறுதல் பொருந்தும் (Meiyappan, 1992).

இருப்பினும், சக்தியை வழிபடும் பாரதி உலக மக்கள் அனைவரின் நன்மைக்காகவும் சிவசக்தியிடம் வேண்டுகிறார்.

"நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்

நையப் பாடென்று ஒருதெய்வம் கூறுமே

கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக்

கொண்டு வையம் முழுதும் பயனுற

பாட்டிலே அறம் காட்டெனும் ஓர் தெய்வம்"

என்னும் மகாகவி பாரதியாரின் சிந்தனை வரிகள் தெய்வ நம்பிக்கையின் ஊடாக மானுட குலத்தின் ஒற்றுமையை வலியுறுத்துவதாகவே அமைவதைக் காணலாம் (Meiyappan, 1992).

## கண்ணன் பாட்டில் சமயப்பொதுமை

வல்லமை பெறுவதற்காக பராசக்தியை வாழ்த்தி வணங்கிய பாரதி, வைணவ சமயத்தின் முழுமுதற்கடவுளாகிய கண்ணனைத் தெய்வமாக மட்டுமின்றி தந்தை, தாய், நண்பன், ஆண்டை, சேவகன், காதலன், காதலி, குரு, தோழன் எனப் பார்க்கும் பொருளில் எல்லாம் கண்ணனையே கண்டு வியந்து பாடுகிறார்.

"நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்

பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்"

என்று கண்ணனைத் தமது கவிதை வரிகளால் மகாகவி பாரதியார் பாடிப் பரவியுள்ளமையால் எங்கும் நீக்கமற நிறைந்தவன் இறைவன் என்பது மகாகவியின் கடவுள் கொள்கை என்பதை உணர முடிகிறது (Meiyappan, 1992).

இவ்விதமாக கண்ணனைப் பாடும் மகாகவி பாரதியார், மதஅபிமானங்களால் ஏற்படும் அறியாமையை,

"நாவு துணிகுவ தில்லை-உண்மை

நாமத்தை வெளிப்பட உரைப்பதற்கே

யாவரும் தெரிந்திடவே எங்கள்

ஈசனென்றும் கண்ணன் என்றும் சொல்லுவதுண்டு

மூவகைப் பெயர்புனைந்தே அவன்

முகம் அறியாதவர்கள் சண்டைகள் செய்வார்"

என்னும் கவிதை வரிகளால் பாடியுள்ளமை மதப்பூசலுக்கு எதிரான பாரதியாரின் சிந்தனை என்று கொள்ளுதலே பொருத்தமாகும் (Meiyappan, 1992). மானுட ஒற்றுமைக்கு எதிராக மதங்கள் கற்பிக்கும் வேற்றுமைகளை வேரோடு அழிக்கவேண்டும் என்பதனை,

"நாலு குலங்கள் அமைத்தான்-அதை

நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்

சீலம் அறிவு தருமம் இவை

சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்

மேலவர் கீழவர் என்றே வெறும்

வேடத்தில் பிறப்பினில் உதிப்பனவாம்

போலிச் சுவடியை எல்லாம் இன்று

பொசுக்கிவிட்டால் எவர்க்கும் நன்மை யுண்டென்பான்"

என்னும் போர்க்குரலாகவே மகாகவி பாரதியார் தமது கவிதைகளில் பதிவு செய்துள்ளமை அவர்தம் மதநல்லிணக்கச் சிந்தனையின் ஒரு கூறாகவே கொள்ள வேண்டும் (Meiyappan, 1992). இவ்வாறு மகாகவியின் சமயப் பாடல்களிலும் மனிதநேயச் சிந்தனையும், ஒற்றுமைச் சிந்தனையும் ஓங்கி உயர்ந்து விளங்குவதைக் காணலாம்.

## ஒற்றுமை கொட்டும் முரசு

உலகமக்கள் அனைவரும் நிகர் என்று கொட்டி முழக்கிய பாரதியாரின் முரசு கவிதைகள், மனிதகுல வேற்றுமைகளைத் தகர்த்து எறியவும் ஆர்ப்பரித்து முழங்குகிறது.

"தெய்வம் பலப்பல சொல்லி-பகைத்

தீயை வளர்ப்பவர் மூடர் உய்வதனைத்திலும் ஒன்றாய் எங்கும்

ஓர் பொருளானது தெய்வம்"

என்று மதவெறிக்கு எதிராக முரசு கொட்டும் மகாகவி பாரதியாரின் வரிகள் மனிதகுலத்திற்கு மதநல்லிணக்கத்தைப் போதிப்பதாகவே அமைந்துள்ளது (Meiyappan, 1992).

பல்வேறு சமயத்தவரும் பல பெயர்களில் பல்வேறு வடிவங்களில் வணங்கிடும் தெய்வங்கள் யாவும் ஒன்றே என்னும் நல்லிணக்கச் சிந்தனையை,

"தீயினைக் கும்பிடும் பார்ப்பார்-நித்தம்

திக்கை வணங்கும் துலுக்கர்

கோவில் சிலுவையின் முன்னே

கும்பிடும் ஏசு மதத்தார்

யாரும் பணிந்திடும் தெய்வம்-பொருள்

யாவினும் நின்றிடும் தெய்வம்

பாருக்குள்ளே தெய்வம் ஒன்று-இதில்

பற்பல சண்டைகள் வேண்டாம்"

எனப் பாரதியாரின் கவிதைகள் உணர்த்திச் செல்கின்றன (Meiyappan, 1992).

## பாரதியின் முத்துமாரி வழிபாடு

சக்தி, கண்ணன் போன்ற தெய்வங்களைப் பாடியதோடு நாட்டுப்புற தெய்வமாகிய முத்துமாரியையும் வணங்கிப் பாடுகிறார். எளிய மக்களின் தெய்வமாகிய முத்துமாரியை, 'உலகத்து நாயகியே' என்று விளித்து,

"துணிவெளுக்க மண்ணுண்டு -எங்கள் முத்து

மாரியம்மா எங்கள் முத்துமாரீ!

தோள்வெளுக்கச் சாம்பருண்டு -எங்கள் முத்து

மாரியம்மா எங்கள் முத்துமாரீ!

மணிவெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து

மாரியம்மா எங்கள் முத்துமாரீ!

மனம்வெளுக்க வழியில்லையே -எங்கள் முத்து

மாரியம்மா எங்கள் முத்துமாரீ!"

என்று தெளிந்த நல்லறிவையே தெய்வத்திடம் வேண்டுகிறார் (Meiyappan, 1992).

## நீயே கடவுள்

இந்தியாவில் தோன்றிய பக்திநெறிகளை மட்டுமல்லாது உலகத்தில் தோன்றிய பல்வேறு வழிபாட்டு நெறிகளையும் கற்றுணர்ந்த பாரதியார், அவை எல்லாவற்றிலும் நிறைந்திருக்கும் உண்மைக் கருத்தை,

"பூமியிலே கண்டம் ஐந்து மதங்கள் கோடி

புத்தமதம் சமணமதம் பார்ஸி மார்க்கம்

சாமியென யேசுபதம் போற்று மார்க்கம்

சனாதன மாம்இந்துமதம் இஸ்லாம் யூதம்

நாமமுயர் சீனத்து தாவு மார்க்கம்

நல்ல கண்பூசி மதம் முதலாப் பார்மேல்

யாமறிந்த மதங்கள் பல உளவாம் அன்றே

யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே

பூமியிலே வழங்கிவரும் மதத்துக் கெல்லாம்

பொருளினைநாம் இங்கெடுத்துப் புகலக் கேளாய்

சாமி நீ: சாமி நீ: கடவுள் நீயே:

தத்வமஸி: தத்வமஸி: நீயே அஃதாம்

பூமியிலே நீ கடவு ளில்லை யென்று

புகல்வதுநின் மனத்துள்ளே புகுந்த மாயை

சாமிநீ அம்மாயை தன்னை நீக்கி

சதாகாலம் சிவாஹ மென்று சாதிப்பாயே"

எனப் பாடுகிறார் (Meiyappan, 1992). இங்கு கூறப்படும், 'தத்வமஸி' என்பதற்கு, 'நீயே கடவுள்' எனப் பொருள்படுகிறது. மாந்தர்கள் ஒவ்வொருவரும் தாமே கடவுள் என்பதை உணர்ந்தால், தனக்குள்ளும் கடவுள் இருப்பதை உணர்ந்தால் சகிப்புத் தன்மையும் அன்பும் பெருகும்.

## பாரதியின் பார்வையில் இஸ்லாம்

இஸ்லாம் சமயம் குறித்த பாரதியாரின் கருத்துக்களை அவருடைய உபந்யாசங்களின் வழி அறியலாம். இஸ்லாமிய மதத்தவரின் கூட்டங்களில் பாரதியார் ஆற்றிய உபந்யாசம் 'சுதேசமித்திரன்' இதழில் கட்டுரையாக வெளிவந்துள்ளது. "இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை" என்னும் தலைப்பில்

பாரதியார் ஆற்றிய உபந்யாசத்தின் வாயிலாக இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றிய அவரது கருத்துக்களை அறிந்து கொள்ளலாம். “இஸ்லாம் என்பது ஒரு தனி வகுப்பினருக்குரிய கொள்கை அல்லது மதத்தைக் குறிப்பிடுவதன்று. “இஸ்லாம்” என்ற அராபிய மொழிக்கு “பக்தி” என்பது பொருள். ஆதலால், இஸ்லாம் என்பது உலகம் முழுமைக்கும் பொதுவானதாகும்” என்னும் பாரதியாரின் கருத்து மத நல்லிணக்கத்தின் குரலாக ஒலிப்பதைக் காண முடிகின்றது (Manikandan, 2022).

இஸ்லாமிய சமயத்தின் நற்குணங்களில் ஒன்றாகிய சகோதரத்துவத்தைப் பாரதியார் பெரிதும் வியந்து போற்றியுள்ளார். பிரெஞ்சுப் புரட்சியின் தாரக மந்திரங்களாகிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் மூன்றனுள் சகோதரத்துவமே, சுதந்திரமும் சமத்துவமும் ஏற்பட மூல காரணமாக அமையும் எனகு குறிப்பிட்டுள்ளார், பாரதியார். இக்கருத்தை, “ஐரோப்பிய நாகரிகத்துக்காதாரமான மகாபிரளயம் (பெரிய ஜனஸமூகப்புரட்சி) ஏற்பட்டது. அப்போது உலகத்தைப் புதிதாகவும், அநியாயமற்றதாகவும், துன்பமற்றதாகவும் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் பாடுபட்ட அந்தப் புரட்சித் தலைவர்கள் ஸ்வதந்தரம், ஸமத்துவம், ஸகோதரத்துவம் என்ற மூன்று மந்திரங்களைக் கடைப்பிடித்தனர். அவையே இன்றைக்கும் ஐரோப்பிய நாகரிகத்திற்கு இலக்காகத் திகழ்கின்றன. இவற்றுள் ஸகோதரத்துவம் ஏற்பட்டால் அதனின்று ஸமத்துவமும், அதனின்று ஸ்வதந்தரமும் தாமாகவே விளையுமாதலால், மனித சாதி மேன்மைப்படுவதற்குரிய நீதிகள் அனைத்திலும் ஸகோதரத்துவமே மேம்பட்ட நெறியாகும். இது இஸ்லாம் மதத்தினாலே பிரதிஷ்டை செய்யப்பட்டது” என்னும் பாரதியாரின் உபந்யாசப் பகுதி உணர்த்தக் காணலாம் (Manikandan, 2022).

இவ்வாறாக இஸலாமின் பெருமைகளை உரைத்த பாரதியார், அனைத்து மதத்தவரும் பிற மதத்தவர்கள் மீது அன்பு கொண்டவர்களாக வாழ வேண்டும் என விழைகிறார். அதற்காக அல்லாவிடம் வேண்டிக் கொள்கிறார். “நாம் எல்லோரும் ஸஹோதரர்; கிறிஸ்தவர், ஹிந்துக்கள், பௌத்தர்கள், மகமதியர் எல்லோரும் ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவுமாக இருந்து துணைசெய்து, எல்லோருக்கும் பொதுவாகிய கடவுளின் பக்தியில் உண்மையான “தீன்” கொண்டு, அதினின்றும், நோவு, சாவு, துன்பம், கவலை முதலிய அரக்கர்களை வென்று மக்கள் தேவர்களைப்போல வாழும்படி கிருபை செய்ய வேண்டுமென்று நான் அல்லா ஹூத்த ஆலாவை மிகவும் வணக்கத்துடனும் உண்மையுடனும் வேண்டிக் கொள்ளுகிறேன்” எனப் பாரதியார் வேண்டிக் கொள்வது அவர்தம் மத நல்லிணக்கச் சிந்தனையின் வெளிப்பாடாக அமைந்துள்ளது (Manikandan, 2022).

## புதிய ஆத்திசூடியில் மத நல்லிணக்கம்

பழமையான பொய்மைச் சாத்திரங்களைப் பொசுக்கி அழிக்க வீறு கொண்டு எழும் பாரதியார், 'புதிய ஆத்திசூடி' வாயிலாக புதுமை படைத்திட விழைகிறார்.

“ஆத்திசூடி இளம்பிறை அணிந்து
மோனத்திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறம் கொண்டு பாற்கடல்மிசை கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப் பலமதத்தினர்
உருவகத்தாலே உய்த்து உணராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதன்இயல் ஒளியுறும் அறிவாம்
அதன்நிலை கண்டார் அல்லலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்”

என்று சுத்த அறிவையே தெய்வமெனக் கொண்டு வையத்தில் வாழ்வாங்கு வாழ பாரதியாரின் கவிதைகள் வழிகாட்டுகின்றன (Meiyappan, 1992).

## முடிவுரை

தமிழ்ப்பெருங்கவிஞர்களுள் தனிப்பெருங்கவிஞராக தமிழ்ச்சமூகத்தால் இன்றளவும் போற்றப்படும் பாரதியாரின் கவிதைகள் இந்தியப் பாரம்பரியத்தின் பல சமயநெறிகளையும் பாடிப் பரவியுள்ளன. அத்தகைய பக்திப்பாடல்கள் அனைத்தும் தெய்வபக்தியின் வழியாக தேசவிடுதலை, ஆன்ம விடுதலை, சகிப்புத்தன்மை போன்றவற்றையே பெரிதும் வலியுறுத்திச் செல்கின்றன. ஆகவே, மகாகவி பாரதியாரின் தெய்வபக்திப் பாடல்கள் மதக்கொள்கைகளைக் பரப்புவதாக அல்லாமல், ஆன்மநேய ஒருமைப்பாடு, சமய சகிப்புத்தன்மை ஆகியவற்றின் அடிநாதமாகவே ஒலிப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

## References


Gnanasambandan, A, S., (1995) Bharathiyum Bharathidasanum, Ganga Puthaga nilaiyam, Chennai, India.

Manikandan, Y., (2022) Bharathiyum Gandhiyum, Kalachuvadu Pathippagam, Nagercoil, India.

Meiyappan, S., (1992) Bharathiyar Kavidhaigal, Manivaasagar Pathippagam, Chennai, India.

Paramasivan, T., (2008) Vazhithadangal, Mani Pathippagam, Palayamkottai, India.

Senthamizh Pavai, S., Arivudainambi, C., (2021) Power worship of Bharatiyar songs, International Research Journal of Tamil, 3(S-2), 164-169. https://doi.org/10.34256/irjt21s232



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License